REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ... ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

குழந்தை மருத்துவத்திற்கு 20 இலட்சம் டாலர் உதவி

நியூயார்க், செப். 14—

இந்தியாவில் 6 திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஐ. நா. அவசர கால நிதி நிர்வாக நிறுவனத்திற்கு 20 இலட்சம் டாலர் உதவி ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது.

மலர் 5] சென்னை: ஆவணி 29உ சனி (14—9—57) ★ ★ வெளியூர்: ஆவணி 30உ ஞாயிறு (15—9—57) [இதழ் 79

நடைபெற்றது நீதித்துறை விசாரணை அல்ல!

சர்க்கார் உத்தரவு தவருன கருத்தையே தருகிறது

குற்றச்சாட்டுகள் மீது பகிரங்க விசாரணை வேண்டும்

போலீஸ் அதிகாரிமீது குற்றச்சாட்டுகள்: விசாரணை முடிவுபற்றி அன்பழகன் அறிக்கை

சென்னை, செப். 14—

சென்னை உயர்தரப் போலீஸ் அதிகாரிமீது எழுந்த குற்றச்சாட்டுக்கள் குறித்து, நீதிபதி திரு. பி. என். இராமசாமி அவர்கள் நடத்திய விசாரணை குறித்தும், அதன்மீது சர்க்கார் பிறப்பித்துள்ள உத்தரவு குறித்தும், தி. மு. கழக சட்டசபைக் கட்சித் துணைத் தலைவர் தோழர் க. **அன்பழகன்** அவர்கள் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடுவதாவது:—

சட்டசபையில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது உரையாற்றுகையில் சில உயர்தரப் போலீஸ் அதிகாரிகளின்நடத்தை குறித்து நான் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் சென்னை போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல்மீது எழுந்த சில குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரித்து நீதிபதி பி. என். இராமசாமி அவர்கள் தந்த அறிக்கை மீது சர்க்கார் பிறப்பித்துள்ள உத்தரவு, உண்மையில் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இங்கு நான், இந்தச் சம்பவம் அல்லது குற்றச்சாட்டுக்களின் தகைமைகள் பற்றி ஆராயப்போவதில்லை—ஆராய முடியாது. இதற்கான காரணங்கள் தெளிவானவை. பின்னல், இந்த அறிக்கை சட்டசபையில் தாக்கல் செய்யப்படும்; அப்போது அங்கு, இந்த விஷயம் பற்றி நான் கவனித்துக்கொள்வேன்.

நான் இந்த அறிக்கை வெளியிடுவதின் நோக்கமெல்லாம், சர்க்காரின் உத்தரவு உருவாக்கக் கருதும் ஒரு தவருன கருத்தைத் தெளிவுபடுத்துவதற்குத் தான்; அந்த உத்தரவு, சில விஷயங்களை வேண்டுமென்றே திட்டமிட்டு இலாவகமாக தெளிவற்ற நிலைக்கு ஒதுக்கியிருக்கிறது.

'விசாரணை', 'நிர்ணயங்கள்' முதலியன போன்ற சொற்களை உபயோகிப்பதின்மூலம் சர்க்கார், திரு. பி. என். இராமசாமி அவர்களின் அறிக்கையை ஒரு நீதிபூர்வத் தீர்ப்பு என்று கருதும்படிச் செய்ய முயற்சித்திருப்பது கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன்; இது, திரு. இராமசாமி அவர்களின் கருத்துப்படிகூட ஒரு நீதிபூர்வத் தீர்ப்பு அல்ல. அதுபோன்ற ஒரு நீதிபூர்வ விசாரணை ஏதும் நடத்தப்படவில்லை என்பதைத் தெளிவாக மக்களுக்குச் சொல்லியாக வேண்டும்.

ஒரு விவகாரம் குறித்து விசாரணை நடத்த, ஒரு உயர் நீதிமன்ற நீதிபதி நியமிக்கப்படுகிறர் என்பதினுலேயே, அந்த விசாரணை ஒரு நீதிபூர்வ விசாரணை ஆகிவிட முடியாது. ஒரு விசாரணையின் நீதி பூர்வத் தன்மை, விசாரணை நடத்தும் குழுவினிடத்தில் ஒப்படைக்கப்பட்டு, பிரயோகிக்கப்படுகிற அதிகாரங்களையும், விசாரணையின்போது கையாளப்படும் நடைமுறையையும் பொறுத்ததாகும். தான் ஒரு நீதிபூர்வ விசாரணை நடத்த அதிகாரமளிக்கப்படவில்லை என்பதையும், தான் அப்படி ஒரு விசாரணை நடத்தவில்லை என்பதையும், கனம் நீதிபதி அவர்களே தயக்கமின்றி ஒப்புக்கொள்வார்.

சர்க்கார் அத்தகைய அதிகாரங்களை அளிக்காமலும் நடைமுறைகளை உத்தரவிடாமலும் இருந்ததற்கான காரணங்கள், அவர்களுக்கே நன்கு தெரியும்.

விசாரணையின்போது உண்மையில் எந்தகைய நடைமுறை கையாளப்பட்டது என்பது மக்களுக்குத் தெரியாது; அவர்களுக்கு இன்னும் தெரிவிக்கப்படவும் இல்லை. பிராசிகியூஷன் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் தரப்பில் எந்த ஒரு சாட்சியும் விசாரணைக்கு அழைக்கப்பட்டதாகவோ, மற்றவரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டதாகவோ தெரியவில்லை. ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறபடி, விசாரணை இரகசியமாகவே நடைபெற்றிருக்கிறது. ஒரு வகையில், அது ஒருதலைப்பட்சமானதாகவும் இருந்திருக்கிறது.

அதிகாரியே விசாரணை கோருகிறர்; விசாரிக்க நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறர்—என்றெல்லாம் பிரமாதமாக விளம்பரப்படுத்தப்பட்டதற்கு முற்றிலும் விரோதமாக விசாரணையும், விசாரணை நடவடிக்கைகளும், மக்களும் பத்திரிகைகளும் அறியாதவகையில், மிகவும் பாதுகாப்புடன் இரகசியமாகவே நடைபெற்றிருக்கின்றன.

உயர்தர அதிகாரிகள்மீது எழும் குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணை நீதிபூர்வமானதாகவும், பகிரங்கமானதாகவும் இருக்கவேண்டும். விசாரணை முடியும் வரை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி வைத்தல், பழிவாங்கப்படுவதிலிருந்து சாட்சிகளுக்கு முழு பாதுகாப்பு அளித்தல், பிராசிகியூஷனுக்கும், புலன் விசாரணைக்கும் உதவ இதர பிரதேசப் போலீஸ் அதிகாரிகளின் துணையை நாடுதல் போன்ற அத்தியாவசியமான நிபந்தனைகளைக் கடுமையாக அனுசரிக்க வேண்டும்.

மேற்கண்டவை ஒன்றும் வழக்கத்திற்கு மாறுனவை அல்ல. அவற்றின் அவசியத்தன்மை குறித்து கனம் நீதிபதி அவர்களுக்குக்கூடத் தெரிவிக்கப்பட்டது; என்றுலும், மிகவும் கண்டிப்பாக நிர்ணயிக்கப்பட்ட அதிகார வரம்பின் காரணமாக, இந்த விஷயத்தில் அவர் ஏதும் செய்ய இயலாமற் போயிற்று என்பதையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிபந்தனைகள், நேர்மையான-பலனுள்ள ஒரு விசாரணைக்கு இன்றியமையாதனவாகும்;

ஆனல் சர்க்கார், இந்த நிபந்தனைகளில் ஒன்றைக்கூட நிறைவேற்றவில்லை என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டாகவேண்டும்.

நான் தெரிவித்துள்ளபடி, இரகசிய விஷயங்களாகவே போய்விட்ட இந்த 'விசாரணை,' 'தீர்ப்பு' இவைபற்றி, மக்களே தீர்மானித்துக்கொள்ளட்டும்; அவற்றிற்கு மக்கள் தரவேண்டுமென நினைக்கிற மதிப்பைத் தரட்டும்.

நீதி என்பது, திரையிட்டு மூடிவிடக்கூடிய பண்பல்ல என்று அட்கின்பிரபு கூறினர்; ஆனல், சென்னை சர்க்கார் தங்கள் கருத்தில், அப்படி எண்ணுகிருர்கள் போலும்!

புதிதாக உருவாக்கப்பட்ட இணைச் செயலாளர் பதவிக்கு....

மாதம் ரூ. 3,000 சம்பளமாம்!

புதுடில்லி, செப். 13—

நேற்று மக்கள் சபையில் பெரும் புயல் அடிப்பதற்குக் காரணமாயிருந்த ஒரு இணைச் செயலாளர் பதவி, மீண்டும் இன்று கேள்விகளுக்கு இலக்காகியது.

புதிதாகத் தற்காப்பு இலாகாவில் இணைச் செயலாளராக்கப்பட்டவர், மாதம் ரூ. 3,000 சம்பளம் பெறுவதாக ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறர்.

'இவர் முன்பு பெற்றுக்கொண்டிருந்த சம்பளத்திற்கும், இப்போது பெறும் சம்பளத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?' என்று கேட்கப்பட்டபோது, 'முன்னைய உத்தியோகத்தில இவர் உச்சமாக ரூ. 2,750 வரை மாதந்தோறும் பெறமுடியும்' என்றும் மந்திரி தெரிவித்திருக்கிறர்.

'இந்தக் குறிப்பிட்ட அதிகாரி, முன்பு நிதி இலாகாவில் துணைச் செயலாளர் பதவியில் அமர்த்தப்படுவதாக இருந்து, நிதி இலாகா அவரை வேண்டாம் என்று கூறியது உண்மைதானு?' என்று கேட்டபோது, 'இல்லை; இவரை, உருக்கு இரும்புத் தொழிற்சாலைத் திட்டங்களுக்கு நிதி ஆலோசகராகத் தரவேண்டுமென நானே கேட்டேன்; அவர் உடல்நலக் காரணங்களால் அப்பதவி ஏற்க மறுத்துவிட்டார்' என்றும் நிதி மந்திரி கூறியிருக்கிறர்.

சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு ஏன்?

நகரசபைத் தலைவருக்குக் கருப்புக்கொடி

பம்பாய், செப். 13—

பம்பாய் நகரசபை ஊழியர்கள் 5,000 பேர் இன்று நகரசபைக் கட்டிடத்தின்முன் கூடி, நகரசபைத் தலைவர் வெளியே வந்ததும் அவரைத் தடுத்து நிறுத்தி கருப்புக்கொடி காட்டினர்.

'சங்கத்திற்கு அளித்த வாக்குறுதிகளை ஏன் அமுல் செய்யவில்லை?' என்று அவர்கள் கேட்டனராம்.

'எனக்கு அந்த அதிகாரம் இல்லை' என்ருராம், அவர்!

'பின்னர் ஏன் வாக்களித்தீர்கள்?' என்று கேட்டனராம்; தொழிலாளர்கள்!

இதற்குள் போலீஸ் படை வந்து நகரசபைத் தலைவருக்குப் பாதுகாப்பு அளித்து போலீஸ் வண்டியில் ஏற்றிச்சென்றுவிட்டனராம்.

தப்பி ஓடிவிட்டாராம், நகரசபைத் தலைவர் திரு. டோண்டேயா!

ஆர்ப்பாட்டக்காரர்களைப் போலீசார் துரத்தித் தடிகளால் அடித்து விரட்டினராம்!

தென்காசியில் முசுக்கட்டை, பட்டுப் பண்ணை

தென்காசியில் பட்டு எடுக்கும் வேலையைச் செய்முறையில் செய்துகாட்டும் பண்ணை ஒன்றையும், 2 ஏக்கர் முசுக்கட்டைத் தோட்டத்தையும் ஏற்படுத்த அரசாங்கம் அனுமதித்திருக்கிறது.

காணமற்போன விமானம்

விழுந்து நொறுங்கிக்கிடந்தது

கோவை, செப். 13—

நேற்றுக் காலையிலிருந்து காணவில்லை என்று அறிவிக்கப்பட்ட இந்திய விமானப் படையைச் சேர்ந்த விமானம் ஒன்று, தென் கன்னட மாவட்டத்தில் முடர்வல்லி என்ற இடத்தில் விழுந்து நொறுங்கிவிட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

பெங்களூரிலிருந்து காலை 10-52-க்கு மங்களூர் நோக்கிப் புறப்பட்ட அந்த விமானத்தில், மூன்று விமானிகளிருந்தனர். கோவை செல்லுமுன்னரே அது விழுந்துவிட்டிருக்கிறது. விமானத்திலிருந்த நால்வர் மரணமடைந்துவிட்டனராம்.

விமானம் பற்றி தகவல் கிடைக்குமுன், பல விமானங்கள், காணமற்போய்விட்ட அந்த விமானத்தை இரவு 8-30 மணி வரை தேடி அலுத்துவிட்டனர்; ஆனல் முதகிரி நகர சப்-இன்ஸ்பெக்டர் விமானம் விழுந்து நொறுங்கிக் கிடப்பதை, மங்களூருக்குத் தந்தி மூலம் தெரிவித்திருக்கிறர்.

நெய்யின் இரசாயன அமைப்புகளை ஆராய்ந்து அறிவிக்கும் ஒரு திட்டத்தை மத்திய அரசாங்கம் தயாரித்துள்ளதாம். இதற்கு ரூ. 2,41,000 செலவிடப்படுமாம்.

முக்கிய அறிவிப்பு

கலைவாணர் திரு. என். எஸ். கே. அவர்களின் நினைவாகவும், குடும்ப சம்பந்தமாகவும், தென்னிந்திய நடிகர் சங்கம் மேற்கொண்டுள்ள ஏற்பாடுகளைக் குறித்து, நான் மாறுபட்ட கருத்துக் கொண்டிருக்கிறேன் என்ற பொருள்படவும், வேறு சில தவருன தகவல்களும் ... ந்திரிகைகளில் வெளிவந்திருப்பதைக் கண்டு பேரிதும் வருந்... றேன்.

கலைவாணர் அவர்கட்க... நடிகர் சங்கம் மேற்கொள்ளும் எச்செயலும் சட்டபூர்வமா... என்பதுடன், கலைவாணர் அவர்கள் தமிழகத்திலும், வெளிந... களிலும் உள்ள பத்திரிகைகளில் எழுதியுள்ள கட்டுரைகள், ... தைகள் எதையும் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் அனுமதி... றி யாரும் புத்தக உருவில் வெளியிடக் கூடாது என்பதை... தெரிவித்துக் கொள்கிறேன்.

இப...

சென்னை
13-9-57

(ஒப்பம்) டி. ஏ. மதுரம்

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 14—9—57 சனி

கிணற்றில் வீழ்கிறவர்களுக்கு!

'இச்சகம் பேசியோ, நிர்ப்பந்தம் செய்தோ, இந்தி ஏகாதிபத்தியத்திற்கு தமிழ் மக்களைப் பணியச் செய்ய உலகில் எந்தச் சக்தியாலும் இயலாது' என்ற எச்சரிக்கையை, தென்னகத்தின் சகல நலன்களுக்கும் பொறுப்பாளிகளாக்கப்பட்டிருக்கும் நாம், அழுத்தமான குரலில், முறையான வகையில்—உரிய காலத்தில்—உலகறிய தரவேண்டியவர்களுக்குத் தந்தாகிவிட்டது. ஆனால், 'ஏக இந்தியா' என்ற ஏகாதிபத்திய வெறிக்கு இரையாகிவிட்ட டெல்லிப் பெரியவர்கள் தங்களது இன்றைய கை ஓங்கியதிலே, நாளும் வளர்க்கும் இறுமாப்பினால், எத்தகைய எதிர்ப்பையும் சமாளிப்போம் என்ற தவறான அனுமானத்தோடு, இந்த எச்சரிக்கையையும் வழக்கம் போல அலட்சியப்படுத்திவிடுவதினால் மட்டும், அதன் எதிரொலியான விளைவுகள் நமக்குப் பாதகமாக அமைந்துவிட முடியாது.

நாம் கடமையைச் செய்துள்ளோம்; வெறியால் சுழன்று கொண்டிருக்கும் கண்களை நிதானப்படுத்தி, எச்சரிக்கை கிளம்பும் திசையைக் கூர்ந்து கவனித்து, இந்த இந்தி விவகாரத்தில் காரியமாற்றவேண்டியவர்கள், டெல்லிப் பெரியவர்கள்தான்.

இந்தித் திணிப்புக் குழுவின் அறிக்கை வெளியானபின், தென்னாட்டில், குறிப்பாக, தமிழகத்தில், கூர்மழுங்காதிருக்கும், இந்தி எதிர்ப்புச் சக்தி கொஞ்சம் கொஞ்சமாக அணி திரண்டு வருவதையும் டெல்லிப் பெரியவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறோம்.

'எஜமானவிசுவாச'த்தை அவ்வப்போது 'ஊர்ஜிதம்' செய்துமனுப் போடும் 'கனம்'கள், தமிழ் நாட்டு இந்தி எதிர்ப்புப் பட்டாளத்தின் முன்னோடிகளாக விளங்கி, இதர மக்களுக்குத் தலைமை தாங்கும் பெரும் பேற்றைப் பெறத் 'துடிக்கும் மாணவ மணிகளிடத்தில், 'கிளர்ச்சிகளில் ஈடுபடமாட்டோம்' என்ற உத்திரவாதங்களைப் பெற வெட்கமின்றி முயற்சித்தாலுங்கூட, இந்தி எதிர்ப்புச் சக்திகள் அணிதிரளுவதை அந்த முயற்சி தடுத்துவிட முடியாது என்பதையும் டெல்லிப் பெரியவர்களுக்கு வினயமுடன் எடுத்துரைக்க விரும்புகிறோம்.

தங்களுடைய முடிவுகளுக்கும், தீர்ப்புகளுக்கும் மேல் விசாரணை கிடையாது என்ற ஏகாதிபத்திய மனப்போக்கில், இந்தித் திணிப்பிற்கெதிராக தமிழகத்தில் திரண்டு வரும் கருத்துக்களுக்கும், சக்திகளுக்கும், அவற்றிற்குரிய மதிப்பைத் தராமல், டெல்லிப் பெரியவர்கள், இந்தித் திணிப்பை [illegible]விரப்படுத்த, மனோவேக [illegible]டிக்கைகளை மேற்கொண்[illegible] நம் இத்தருணத்தில், [illegible] நிலத்திலிருந்து கி[illegible] [illegible]யையும் [illegible]கிறோம்.

பீகார்; முழுக்க முழுக்க இந்தி வழங்கும் ஒரு மாநிலம். அங்கு, இன்றைக்கு ஏழு ஆண்டுகளுக்குமுன், 1950-ல் இந்தியை மாநில ஆட்சி மொழி ஆக்குவது என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டது; முடிவின்படி, படிப்படியாக ஆட்சித் துறையின் பல கிளைகளிலும், ஆங்கிலத்திற்குப் பதில் இந்தி புகுத்தப்பட்டது.

ஏழு ஆண்டுகளுக்குள், அதாவது, 1957-ம் ஆண்டுக்குள் மாநில ஆட்சி முழுவதுமாக இந்தியிலேயே நடைபெற வேண்டும் என்ற இலட்சிய எல்லை வரையறுத்துக்கொண்டு இந்த இந்தி மயமாக்கும் வேலைகள் நடைபெற்று வந்தன. ஆண்டுகள் ஏழும் உருண்டோடிவிட்டன. ஆனால் நிலைமை என்ன? இன்றைய மாநிலஆட்சி, 'இந்தக் காலக்கெடு காணாது; இன்னும் குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் வேண்டும்' என்று அறிவித்துள்ளது; காலவரம்பை நீடித்துள்ளது. இந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட சர்க்கார் ஊழியர்களே இன்னும் நிர்வாகத்தை நடத்துவதற்குத் தேவையான இந்தி மொழி அறிவைப் பெறவில்லையாம். மாநிலச் சட்டங்கள், விதிகள் முதலியன இன்னும் மொழிபெயர்க்கப்பட முடியவில்லையாம். அதுமட்டுமல்ல; நீடிக்கப்பட்ட மூன்றாண்டுகளுக்குப் பின்னுங்கூட, நிர்வாகத்தை இந்திமயமாக்கிவிடுவதென்பது எளிதாயிருக்க முடியாது என, சிலர் சந்தேகம் தெரிவித்திருக்கிறார்களாம்.

இதுதான், பீகார் தரும் செய்தி. இந்தி வழங்கும் பீகார் மாநிலத்திலேயே, இந்தியை, மாநில ஆட்சிமொழியாக்க பத்து ஆண்டுகள் போதவில்லை என்னும்போது, டெல்லிப் பெரியவர்கள், பதினைந்து ஆண்டுகளுக்குள் இந்தியா முழுவதிலும் இந்தியைத் திணித்துவிட வேண்டும் என்று முடிவு கொண்டதற்காக, உள்ளூர வேனும் வெட்கப்பட வேண்டாமா?

நமது இந்தி எதிர்ப்பின் அடிப்படை—இந்தியை ஏற்றுக் கொள்வதற்கான காலம் போதவில்லை என்பது அல்ல. இந்தித் திணிப்பே கூடாது என்பதுதான்—என்றாலும், பீகார் தரும் செய்தியைச் சுட்டிக் காட்டுவதன் நோக்கம், கிணற்றில் விழ முடிவு செய்துவிட்டவர்களுக்கு, விளக்கொன்றைத் தருவதினால், பலன் இல்லாவிடினும், கடமையைச் செய்தோம் என்ற திருப்தியைப் பெறுவதற்குத்தான்.

சட்டங்கள் சிலவற்றினால், குருடனுக்கு 'இராஜ விழி' கற்[illegible]த்தர நினைத்து, இந்திக்கு [illegible]ம் புனைந்து ஆங்கிலத[illegible]ன் இடத்தில் இந்தியை அமர்த்துவது என்ற கிணற்றில் விழுமுன், டெல்லிப் பெரியவர்கள் பீகார் செய்தி தரும் வெளிச்சத்தைப் பயன்படுத்திக் கொள்வது நல்லது.

ஆனால், வலிந்து சிறுமைகளைத் தேடிக் கொள்வதில் ஏகாதிபத்தியவாதிகள் ஆறுப்பசியுள்ளவர்களா யிருப்பார்கள் என்றால், நாம் ஏன் அது குறித்து அதிகமாகக் கவலைப்பட வேண்டும்? நாம் ஒன்றும் இந்தித் திணிப்புக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள காலவரம்பினை எதிர்ப்பவர்கள் அல்லர்; மாறாக இந்தித் திணிப்பிற்குக் காரணமான 'ஏக இந்திய' ஏகாதிபத்தியத்தையே எதிர்ப்பவர்கள் என்பதால்தான் அதிகமாகக் கவலைப்படத் தேவை இல்லை என்கிறோம்.

ரூ. 10 லட்சம் பெறுமான சாமான்கள் ஆண்டுதோறும் திருட்டுப் போகின்றனவாம்!

தபால்—தந்தி இலாகா நிலை குறித்துத் தகவல்

புதுடில்லி, செப். 12—

1955—56-ம் ஆண்டில் மட்டும் தபால்—தந்தி இலாகாவில் 4,255 திருட்டுச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என்றும், இதனால் ரூ 10 65 இலட்சம் பெறுமான சாமான்கள் திருட்டுப் போயின என்றும் பொதுக்கணக்குத் தணிக்கைக் குழு கண்டிருக்கிறதாகத் தெரிகிறது.

இதில், தந்தி அனுப்பும் செப்புக் கம்பிகள்தான் அதிகமாகத் திருட்டுப் போகிறதாம்; அதாவது, ரூ. 9.03 லட்சம் பெறுமான செப்புக் கம்பிகள் திருட்டுப் போயிருக்கின்றனவாம்!

இதனைச் சுட்டிக் காட்டியுள்ள தணிக்கைக் குழுவினர், இதனைத் தடுப்பதற்கு வழிவகை காண வேண்டுமென எடுத்துரைத்திருக்கின்றனராம்!

இதன்பேரில் இலாகாவினர், இப்போது செப்புக் கம்பிகளுக்குப் பதிலாக அலுமினியக் கம்பிகளை உபயோகிக்க முடியுமா என்று ஆராய்ச்சி செய்துவருகிறார்களாம்!

தேயிலை வியாபாரிகள் செய்யும் மோசடி!

'வெளிநாடுகளில் இந்தியாவின் பெயர் கெடுகிறது' எனஎச்சரிக்கை

கல்கத்தா, செப். 12—

''வெளிநாடுகளில் இந்தியாவுக்குக் கேட்டினை உண்டாக்கும் முறையில் இந்தியத் தேயிலை ஏற்றுமதியாளர்கள் அநியாயச் செயல்களைப் புரியக்கூடாது'' என்று, இந்திய தேயிலை நிறுவனத்தின் தலைவர் திரு. கோசல் எச்சரித்துள்ளார்.

அத்தகைய இழிசெயல்களில் ஈடுபடும் நிறுவனங்களை அரசாங்கம் விட்டுவைக்காதாம்!

இந்தியத் தேயிலை ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ளவர்களில் ஒரு சிலர், தவறாக நடந்துகொள்வது பற்றிப் பல புகார்கள் வந்துள்ளனவாம்!

''வெளிநாடுகளில், 'இந்திய ஏற்றுமதியாளர்களை, நம்புவதற்கில்லை' என்று கூறுவதைக் கேட்க நேரிடுவது மிகவும் வருத்தத்திற்குரியதாகும்'' என்று கோசல் கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு அந்நிய நாடுகளில் உள்ள மதிப்பைப் பேணி வளர்க்கவும், பொருளாதாரத்தை உறுதிப்படுத்தவும் தேயிலை நிறுவனம் உருவாக்கியுள்ள விதிகளை ஏற்றுமதியாளர்கள் பின்பற்றி நடக்கவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

''இந்தியத் தேயிலையை இறக்குமதி செய்யும் நாடுகளை ஏமாற்றுவதில் ஈடுபடும் இந்தியத் தேயிலை ஏற்றுமதியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப்படும்'' என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அம்பர் இராட்டையில் பயிற்சி தர!

மேலும் 12 நிலையங்களாம்!

சென்னை, செப். 12—

ஏற்கனவே உள்ள நான்கு நிலையங்களோடு, அம்பர் இராட்டையில் பயிற்சி தருவதற்காக மேலும் 12 நிலையங்களை, எல்லா மாவட்டங்களிலும் பரவலாக ஏற்படுத்த சர்க்கார் திட்டமிட்டிருக்கிறதாம்.

ஒவ்வொரு நிலையமும் மூன்று மாதங்களில் 100 பேருக்குப் பயிற்சி தருமாம்.

நெய்வேலித் திட்டம்!

இதுவரை ரூ. 8 கோடி செலவு

புதுடில்லி, செப். 13—

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி தோண்டும் வேலை நடைபெறுகிறது என்றும், இதுவரை ரூ. 8,20,00,000 இத்திட்டத்திற்குச் செலவிடப்பட்டுள்ளது என்றும், மக்கள்சபையில் மத்திய அமைச்சர் சுவரண்சிங் தெரிவித்துள்ளார்.

ஆயுதப் போட்டியில் ஈடுபடாதீர்!

வாஷிங்டன், செப். 12—

ரஷ்யாவுடன் மத்திய கிழக்கில் ஆயுதப் போட்டியில் ஈடுபட வேண்டாம் என்றும், 'ரஷ்ய ஆக்கிரமிப்பை'த் தடுக்கப் பொருளாதார உதவியில் ஈடுபட வேண்டும என்றும், அமெரிக்காவை, இங்குள்ள தனது தூதுவர்மூலம் இஸ்ரேல் வேண்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

பிரிட்டனில் ஆகாகான் சொத்து

ரூ. 95 இலட்சம் மதிப்புடையது

லண்டன், செப். 12—

காலஞ்சென்ற ஆகாகான் உலகப் பணக்காரர்களில் ஒருவர் எனப் புகழப்பட்டவர், அவர், தனது 'உயில்' மூலம் பிரிட்டனில் 70,97,000 பவுன் விட்டுப் போயிருக்கிறார் என்பது இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது. இது சுமார் ரூ. 94,62,700 மதிப்புடையதாகும்.

அவர் தமது உயில் மூலம், பேரப்பிள்ளையைத் தனது வாரிசாக நியமித்திருக்கிறார் என்றும், சொத்தில் தனது மனைவியும், இரு புதல்வர்களுமே பங்கு அனுபவிக்க உரிமையுடையவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுச் சென்றிருக்கிறாராம்.

சயாம் நாட்டில் அரசியல் நெருக்கடி

ஆளும் கட்சியிலிருந்து பலர் இராஜிநாமா

பாங்காக், செப். 11—

சயாம் நாட்டின் அரசியலில் பெரியதொரு நெருக்கடிதோன்றியுள்ளதாகப் பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆளும் கட்சியில், மார்ஷல் பிபுல் சங்ராமைத் தனித்துவிட்டு, சுமார் 61 இராணுவத் தலைவர்கள் இராஜிநாமாச் செய்துவிட்டதை ஒட்டி இந்த நெருக்கடி உருவாகியுள்ளதாம்.'

இந்த இராஜிநாமாக்களைப் பரிசீலிப்பதற்காக மந்திரி சபையின் அவசரக் கூட்டம் நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

பாடப் புத்தகங்களைத் தேசீயமயமாக்கலாமா?

மாநிலங்களிடை கருத்து வேறுபாடு

புதுடெல்லி, செப். 12—

பள்ளிப் பாடப் புத்தகங்கள் வெளியிடுவதை தேசீயமயமாக்குவதுபற்றி மாநில சர்க்கார்களிடையே பல்வகைக் கருத்துக்கள் நிலவுகின்றனவாம்!

எனவே, இந்தப் பிரச்சினை குறித்து, வரும் செப். 20, 21-ந் தேதிகளில் டெல்லியில் நடைபெறும் மத்திய—மாநில கல்வி மந்திரிகள் மாநாட்டில் தீர்க்கமாக விவாதிப்பது என்று முடிவாகியுள்ளதாம்.

பாடப் புத்தகங்களைத் தேசீயமயமாக்கியுள்ள மாநிலங்கள், அந்த முயற்சி அனுகூலமானதாகவே இருப்பதாகக் கூறுவதாகவும், இதர மாநிலங்கள், இது ஒரு ஜனநாயகபூர்வமான கொள்கையல்லவெனக் கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுவாக மத்திய சர்க்கார் கல்வி இலாகா, இந்தியப் பள்ளிகளில் உபயோகிக்கப்படும் பாடப் புத்தகங்கள் தரமானவையாக இல்லை எனக் கருதுகிறதாம்!

இந்தியாவைக் காண!

வெளிநாடுகளிலிருந்து 68,880 பேர் வந்தனராம்!

1956-ம் ஆண்டு வெளிநாடுகளில் இருந்து இந்தியாவைக் காண்பதற்கு மொத்தம் 68,880 யாத்திரீகர்கள் வந்திருந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நோக்கம் என்ன?

அரசாங்க வேலைகளுக்கு குறிப்பிட்ட மாநிலத்தில் குறிப்பிட்ட காலத்திற்கு வசித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை இப்போது அமுலில் இருக்கிறது; அதை எந்த மாநிலத்தில் இருப்பவர்களும், எப்பகுதியில் வேண்டுமானாலும் வேலை செய்யலாம் என்ற நிலையை உருவாக்க மத்திய அரசாங்கம் முனைந்துள்ளது.

இதற்கான சட்டத்தை டில்லியில் உருவாக்கியுள்ளாராம், உள்நாட்டு அமைச்சர் பந்த்!

பெட்ரோல் தொழிலில் கிடைத்த இலாபம்!

1956-ம், ஆண்டில், இந்தியாவில் பெட்ரோல் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்குக் கிடைத்துள்ள இலாபம் வருமாறு:—

		லட்சம்
பர்மா-ஷெல்:	ரூ.	906
,, (சுத்திகரிப்பு)	ரூ.	632
எஸ். வி. ஓ. சி.:	ரூ.	81
கால்டெக்ஸ்:	ரூ.	160

இந்த நிறுவனங்கள் மொத்தம் ரூ. 663 இலட்சத்தை வெளிநாடுகளிலுள்ள பங்குதாரர்களுக்கு அனுப்பியுள்ளனவாம்.

இந்தப் பெருந் தொகையை இந்தியாவில் முதலீடு செய்ய வேண்டும் என்று இந்திய அரசாங்கம் நிபந்தனை கொண்டுவரக் கருதவில்லையாம்.

மக்கள்சபையில் மத்திய அமைச்சர் சர்தார் சுவரண் சிங் இத்தகவலைத் தந்துள்ளார்.

தொழிலாளர் வாழ்க்கைச் செலவுப் புள்ளி

1957 ஆகஸ்டு 31-ம் நாளுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவு ஒரு புள்ளி குறைந்து 372-ல் நின்றது. காய்கறிகள், நல்லெண்ணெய் ஆகியவைகளின் விலை குறைந்ததே இதற்குக் காரணம்.

நிதி அமைச்சரின் பரிதாப நிலை

டில்லிக்குச் சென்று நியாயம் கோருவாராம்!

சென்னை மாநில உணவு நிலை?

சென்னை, செப். 13—

சென்னை மாநிலத்தில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு மத்திய அரசாங்கம் அக். 1-ந் தேதி முதல் அரிசி வழங்குவதை நிறுத்த முடிவு செய்துள்ளது தெரிந்த ஒன்றாகும்.

நியாய விலைக் கடைகளுக்குத் தேவைப்படும் அரிசியை உணவு மண்டலப் பகுதியில் மாநில அரசாங்கமே கொள்முதல் செய்து கொள்ளவேண்டும் என்று கூறப்பட்டது.

தற்போது சென்னை மாநிலத்தில் உள்ள 1,000 நியாய விலைக் கடைகளை நீடித்து நடத்த வேண்டும் என்று உணவு அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்துள்ளார்.

ஏழைகளுக்கு மலிவாக அரிசி கிடைக்கச் செய்வதில் அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாம்; தற்போது தஞ்சை மாவட்டத்திலிருந்து கேரளத்திற்கு அரிசி அனுப்பப்படுகிறதாம்; ஆந்திர மாநிலத்திலுள்ள உபரி அரிசியின் விலை இந்த மாநிலத்தில் உள்ள விலையைவிட அதிகமாக உள்ளதாம்; இந்தக் காரணத்தினால், நியாய விலைக் கடைகளுக்காக சென்னை அரசாங்கம் அரிசி கொள்முதல் செய்ய முடியவில்லையாம்!

எனவே, தென் மண்டலக் குழுவிலிருந்து—குறிப்பாக ஆந்திரத்திலிருந்து அரிசி கிடைக்க மத்திய அரசுடன் சென்னை அரசு மன்றாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாம்!

இதுவரை மத்திய அரசு உணவு கொள்முதலுக்காக மாநிலங்களுக்கு அளித்துவந்துள்ள மானியத் தொகை அக்டோபர் முதல் சென்னைக்கு கிடையாது; அதை தொடர்ந்து தரவேண்டும் என்று டில்லியை சென்னை வற்புறுத்த முடிவு செய்துள்ளது!

மேலும், தென் மண்டலத்திற்குள் அரிசி நடமாட்டத்திற்கு வசதி ஏற்பட வேண்டுமானால், மத்திய அரசாங்கம் தலையிட்டு மாநிலங்களில் உள்ள அதிகப்படியான அரிசியை தென் மண்டலத்திற்குள் மட்டுமே அனுப்ப வேண்டும் என்றும், மண்டலத்திற்கு வெளியே உள்ள மாநிலங்களுக்கு அனுப்பக்கூடாது என்றும் தடை விதிக்க வேண்டியது அவசியம் என்றும் சென்னை அரசாங்கம் டில்லிக்கு எடுத்துக்காட்டியுள்ளது.

சென்னை மாநிலத்திற்கு டில்லி கருணைகாட்ட வேண்டும் என்றும், உணவுப் பிரச்சினையில் டில்லி அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், அரிசி கொள்முதலுக்காக மானிய உதவியை நிறுத்தக்கூடாது என்றும், மண்டலத்திற்குள் உணவுப் பொருள் கொள்முதலுக்கு மட்டும் அனுமதிக்க வேண்டும் என்றும், சென்னை அரசாங்க நிதி அமைச்சர் டில்லியில் நடைபெறும் தேசிய அபிவிருத்திக் குழுவின் கூட்டத்தில் மத்திய உணவு அமைச்சரிடம் கேட்டுக்கொள்ளப் போகிறாராம்!

காட்பாடி வெடிவிபத்து

மாண்டோர் குடும்பத்திற்கு நிவாரணம்

புதுடில்லி, செப். 12—

அண்மையில் காட்பாடியில் நடைபெற்ற வெடிவிபத்தில் உயிர் இழந்தவர்களின் உறவினருக்கு உடனடியாக இடைக்கால நிவாரணம் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக இரயில்வே அமைச்சர் ஜெகசீவன்ராம் மக்கள் சபையில் அறிவித்துள்ளார்.

முடக்கப்பட்டுள்ள வெடி மருந்துகள்

விபத்துக்களின் காரணமாக அரசாங்கம் தடை விதித்துள்ளதால் ஆங்காங்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ள இரயில் பெட்டிகளில் உள்ள வெடி மருந்துகள், வெடி பரிசோதகர் அனுமதியின்பேரில் மட்டுமே விடுவிக்கப்படும் என்றும், இந்த மருந்துகளின் மதிப்பு சுமார் ரூ. 50 இலட்சம் என்றும் மக்கள் சபையில் இரயில்வே அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வெடி விபத்துக்களுக்குக் காரணம்?

வெடி மருந்துகளை இரயில் பெட்டியினுள் வேகமாக வீசுவதாலும், கட்டுகள் தளர்ந்து மருந்துகள் சிதறுவதினாலும் இரயில் பெட்டியின் கதவுகள் மூடப்படும் போது ஏற்படும் அதிர்ச்சியினாலும் வெடி மருந்துகள் விபத்துக்களை உண்டாக்கியிருக்கக்கூடும் என்று மக்கள் சபையில் இரயில்வே அமைச்சர் கூறினார்.

நற்சான்று பெறவேண்டும்

'வெடி மருந்துகளில் பயன்படுத்தப்பட்டுள்ள இரசாயனப் பொருள்கள் ஆபத்தை விளைவிக்கக்கூடியன அல்ல' என்று வெடி மருந்து இலாகா நற்சான்றுப் பத்திரங்கள் வழங்குமாம். அத்தகையவைகள் மட்டுமே இரயில் மூலம் அனுப்புவதற்கு அனுமதிக்கப்படுமாம்!

இனி வெடிவிபத்துக்கள் ஏற்படாதவாறு எல்லா நடவடிக்கைகளையும் இந்தியப் பேரரசு எடுக்குமாம்!

போக்குவரத்து சம்பந்தமாகச் சில மாற்றங்களை ஆராய்ந்து அறிவிக்க ஒரு தனி அதிகாரி நியமிக்கப்படக்கூடும் என்றும் இரயில்வே அமைச்சர் தெரிவித்துள்ளார்.

'கேப்'புக்குத் தடை

பொம்மைத் துப்பாக்கிகளில் வைத்து வெடிக்கும் ஒருவகை மருந்தான 'கேப்' இனி முன் அனுமதியின்றி தயாரிக்க முடியாது. இதற்கு மத்திய அரசாங்கம் தடை விதித்துள்ளது.

தென்னிந்திய வர்த்தகக் கழகக் கோரிக்கை

சென்னை, செப். 12—

இரயில் மூலம் வெடி மருந்துகளை அனுப்புவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கி, வெடி மருந்து கட்டுகளை அனுப்புவதற்கு அனுமதி தரவேண்டும் என்று தென் இந்திய வர்த்தகக் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

பாறைகள் கூறும் விந்தைகள்!

டொரன்டோ—

பழங்காலப் பாறைகளை விஞ்ஞான ரீதியில் ஆராய்வதன்மூலம் உலகத்தைப் பற்றிய ஆச்சரியமான உண்மைகள்பல தெரியவருகின்றன என இங்கு சர்வதேசப் பூபௌதிக சங்கக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

பாறைகளில் இருக்கும் காந்த சக்தி, பூகண்டங்கள் அகன்று செல்வதையும், பூமியின் பெரும் பாகம் படத்தையே மாற்றுமளவுக்கு இடம் மாறுவதையும் தெரிவித்துள்ளன என்று நிபுணர்கள் குறிப்பிட்டனர்.

அமெரிக்காவுக்கும் — ஐரோப்பாவுக்குமிடையே இருந்த தூரம் ஒரு காலத்தில் 1,000 மைல் குறைவாகவே இருந்தது என்றும், இந்தியா ஒரு காலத்தில் பூமத்திய ரேகைக்குத் தெற்குப் பாகத்தில் இருந்தது என்றும் பாறைகள் தெரிவிப்பதாக விஞ்ஞானிகள் குறிப்பிட்டனர்.

கல்வித் திட்டத்திற்கும் திண்டாட்டம்!

தேஷ்முக் வெளியிடும் தகவல்

புதுடில்லி, செப். 11—

"வெளி நாடுகளிலிருந்து தேவைப்படும் விஞ்ஞானக் கருவிகள், மற்றும் பல சாதனங்களை இறக்குமதி செய்வதற்கு நாட்டின் அந்நிய செலாவணி நிலைமை மிகச் சந்தேகத்திற்கு இடம் தருகிறது; இதன் காரணமாக அதிக மாணவர்களுக்கு வசதியளிக்கும் நிலை ஏற்படுமா என்று அஞ்சவேண்டியுள்ளது; இதனால் பல்வேறு பல்கலைக் கழகங்களுடன் இணைந்துள்ள கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் ஊதியமும் வெகுவாகப் பாதிக்கப்படும்" என்று பல்கலைக் கழக மானியக் குழு தலைவர் டாக்டர் சிந்தாமணி தேஷ்முக் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலிருந்து இந்தியா வந்துள்ள கல்வித்துறை மேதைகளை வரவேற்க நடைபெற்ற விழாவில் அவர், இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்கலைக் கழகக் கல்வி அபிவிருத்திக்காக ரூ. 27 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டது; இரண்டாவது திட்டத்தில் அத்தொகை ரூ. 57 கோடியாக உயர்த்தப்பட்டது; இத்தொகையில், திட்டத்தின் படி, பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு ரூ. 27 கோடி ஒதுக்க வேண்டும். மாநிலங்களின் வரவு-செலவுத் திட்டங்களுக்கு ரூ. 20 கோடிக்குமேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மத்திய கல்வி, விஞ்ஞான ஆராய்ச்சிக்கு ரூ. 10 கோடி ஒதுக்கப்படுகிறது.

1950-ல் மொத்தம் 4,20,000 மாணவர்கள் பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும் படித்துக் கொண்டிருந்தனர்; 1955-ல் இந்த எண்ணிக்கை 7,20,000 ஆக உயர்ந்தது; இப்போது மொத்தம் 8,50,000 மாணவர்கள் நாட்டின் பல்வேறு பல்கலைக் கழகங்களில் கல்வி பயின்று வருகின்றனர்.

"இப்போது உள்ள நிலையில், பல்கலைக் கழகக் கல்வி அபிவிருத்திக்கு ஆண்டிற்குக் குறைந்தபட்சம் ரூ. 33 கோடி தேவைப்படுகிறது; இப்போது தரப்படும் ரூ. 10 கோடி போதுமானதல்ல."

மேற்கு வங்கத்தில் உணவுப் பஞ்சம்!

'நெருக்கடியைச் சமாளிக்க சர்க்கார் தயங்காது' என்கிறார் மந்திரி

புதுடில்லி, செப். 12—

வங்கத்தில் பெரும் பஞ்ச நிலை ஏற்பட்டிருப்பதாகவும், 1943-ம் ஆண்டில் தோன்றியது போன்றதொரு நெருக்கடியை பஞ்ச நிலை துரிதமாக நெருங்கிக்கொண்டிருப்பதாகவும், சர்க்கார் இதனைத் தவிர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கோரி மேற்கு வங்கத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் பலரும் டெல்லியிடம் முறையிட்டிருப்பதாகத் தெரிகிறது.

மக்கள்சபையில் பேசிய உணவு மந்திரி அஜீத் பிரசாத் ஜெயின் சமீபகாலமாக அங்கு நிலை மிகக் கஷ்டமாக இருந்துவருவதை சர்க்கார் உணர்ந்தே இருக்கின்றனர் என்றும், பெருங்கஷ்டம் ஏதும் ஏற்படாமல் தவிர்க்க சர்க்கார் முயற்சிக்கும் என்றும் கூறியிருக்கிறார்.

"இன்னும் மூன்று மாதத் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமான அரிசியும், கோதுமை, கோதுமைப் பொருள்களும் இருக்கின்றன; நியாயவிலைக் கடைகளில் தங்களுக்குத் தேவையானவற்றை வாங்கிக்கொள்வதற்காக ஏற்கனவே 77 இலட்சம் உணவுப் பங்கீட்டு அட்டைகள் மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 23 இலட்சம் அட்டைகள் வழங்கவும் முயற்சிக்கப்பட்டுவருகிறது" என்றும் அந்த மந்திரி கூறியிருக்கிறார்.

தஞ்சையில் 2,000 மாணவர்கள் வேலைநிறுத்தம்

இந்தித் திணிப்பை எதிர்த்து ஊர்வலம்

தஞ்சை, செப். 13—

11—9—57 காலை, மத்திய அரசாங்க இந்தித் திணிப்பை எதிர்ப்பதன் அறிகுறியாக தஞ்சை நகர மாணவர்கள் பள்ளிக்குச் செல்லாமல் கண்டன ஊர்வலம் ஒன்று நடத்தினார்கள்.

ஊர்வலத்தில் கரந்தைப் புலவர் கல்லூரி, கரந்தை உமா மகேசுவரர் உயர்நிலைப்பள்ளி, தூயபேதுரு உயர்நிலைப்பள்ளி, வீரராகவ உயர்நிலைப்பள்ளி, சாமியப்பா கூட்டுறவு கல்லூரி, சரபோஜி அரசர் கல்லூரி ஆகிய தஞ்சை நகரக் கல்விக்கூடங்களின் மாணவர்கள் 2,000-த்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

ஊர்வலம் கரந்தைத் தமிழ்ச் சங்கவாயிலினின்றும் கிளம்பி, 'இந்தியைப் பொது மொழியாக ஆக்க வேண்டாம்'; 'இந்தியைக் கட்டாயமாகப் பள்ளிகளில் திணிக்க வேண்டாம்' என்று முழங்கிக்கொண்டே நகரின் முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று திலகர் திடலுக்குச் சென்று அடைந்தது.

அடுத்து, இந்தியைப் பொது மொழியாக்குவதையும், பள்ளிகளில் கட்டயமாகத் திணிப்பதையும் தவிர்க்க வேண்டும் என்ற வேண்டுகோளை அரசியலாருக்கு அறிவிக்கும் வண்ணம் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. பின்னர் மாணவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

காரைக்குடியில்:

காரைக்குடி, செப். 13—

நாடெங்கும் இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படுவதை எதிர்த்து 4—9—57-ல், அழகப்பா கலைக் கல்லூரி மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லாது மாபெரும் ஊர்வலம் நடத்தினர்.

கல்லூரி முதல்வர் திரு. அலெக்சாந்தர் ஞானமுத்து, இந்தியைத் தென்னகத்தில் திணிப்பதை எதிர்ப்பவர்களுள் முதன்மையானவராகத் தன்னைக் குறிப்பிட்டு, ஊர்வலம் ஒழுங்காக நடக்க வேண்டுமென்று கூறி மாணவர்களை அனுப்பிவைத்தார்.

700-க்கும் மேலான மாணவர்களும், ஆசிரியர்களும் கலைக் கல்லூரியிலிருந்து புறப்பட்டு, 'இந்தியைத் தமிழகத்தே திணிக்காதே', 'தென்னாட்டில் இந்தித் திணிப்பை எதிர்ப்போம்' என்று முழக்கமிட்டவாறு, முக்கிய தெருக்கள் வழியாகச் சென்று காந்தி சதுக்கத்தை அடைந்தனர்.

அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மாணவர் தலைவர் கரு. மாணிக்கம், இரா. பெருமான் ஆகியோர் இந்தித் திணிப்பை எதிர்த்துப் பேசியபின், தீர்மானம் ஒன்றுசெயலாளர்கனசபையால் வாசிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

ரிப்பன் மாளிகையில் சத்தியமூர்த்தி

சென்னை, செப். 12—

நகரசபை அலுவலகங்கள் இடம் பெற்றிருக்கும் ரிப்பன் மாளிகை வளைவுக்குள் எஸ். சத்தியமூர்த்தியின் உருவச் சிலை ஒன்று வைக்க ஏற்பாடாகியிருக்கிறது.

1955-ம் ஆண்டில் ஆவடியில் காங்கிரஸ் மாநாடு நடைபெற்ற போது அந்த பண்டித நேரு திறந்து வைத்த சத்தியமூர்த்தியின் சிலையைக் கேட்டுப் பெற்று, ரிப்பன் மாளிகையில் குடியேற்றி, அடுத்த வாரம் சென்னை வரும் காங்கிரஸ் தலைவர் தேபரைக் கொண்டு திறந்துவைக்கச் செய்வதில் 'மேயர்' சீனிவாசன் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்.

காமராசர் சிலை!

தனது பதவிக் காலத்திலேயே மேயர் சீனிவாசன் அவர்கள், முதலமைச்சர் காமராசரின் திருஉருவச் சிலை ஒன்றையும் ரிப்பன் மாளிகையில் இடம்பெறச் செய்வதில் ஆவல் கொண்டுள்ளாராம்.

கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து விலகினர்

"நான் கடந்த 1952-லிருந்து கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினராக இருந்துவந்தேன்; கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கை கோட்பாடுகளில் கண்ட குறைபாட்டாலும், விவசாய சங்கத்தை அவர்கள் நடத்திச் செல்லும் முறையில் உள்ள தவறாலும் கம்யூனிஸ்டுக் கட்சியினின்றும் வெளியேறி விட்டேன். கடந்த ஏப்ரல் மாதம் கடைசி வாரத்தில் என் விலகல் கடிதத்தைத் தமிழ்நாடு கம்யூனிஸ்டு கமிட்டிக்கும், கட்சி யூனிட்டுக்கும் அனுப்பிவிட்டேன்."

என்று, சுத்துக்குழித் தோழர் ஜி. வரதராசன் தெரிவிக்கிறார்.

அன்பளிப்புக்கள்

சென்னை, வண்ணையம்பதி (4-வது வட்டம்) தி. மு. கழகத் தோழர் சி. தெய்வசிகாமணி அவர்கள் துணைவியார் தோழியர் ஆர். டி. நாகம்மாள் 5—9—57-ல் ஒரு ஆண் மகவுக்குத் தாயானார்; இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

குளை தி. மு. கழக உறுப்பினர் திரு. மலர்மன்னன் அவர்களின் துணைவியார் சரோசா அம்மையார் 11—8—57ல் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார்; அம்மகவுக்கு 'வைரமணி' என்று பெயரிடப்பட்டது; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 3 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

கரூர் தோழர் பெருமாள்—தோழியர் சாமியாத்தாள் ஆகியோரது பெண் மகவுக்கு 16—8—57ல் தோழர் கரிகாலன் அவர்களால் 'மல்லிகா' எனப் பெயரிடப்பட்டது; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சி கருதி ரூ. 1 அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

* * *

சேலம் மாவட்டம் தாரமங்கலம் தோழர் ஏ. எஸ். மாரிமுத்து அவர்களது ஆண் மகவுக்கு அண்ணா அவர்களால் 'பாண்டியன்' எனப் பெயரிட்டதின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பு வழங்கப்பட்டது.

'நம் நாடு' இதழ் விற்பனையாளர் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம் நாடு' இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை; ..ந்தனைகளுக்கு விண்ணப்பித்.. கொள்க.

..லூர்

த.. ..ணனூர்

ம.. ..ந்தகம்

கல்..டக்குறிச்சி

இரா..ங்கமங்கலம்

பேலூா ..(..வட்டம்)

ஆலமரத்துப..

(..ரூ வட்டம்)

பாகசாலை (மாயூரம் வட்டம்)

—நிர்வாகி: 'நம் நாடு'

க. அன்பழகன்

எம். எல். ஏ., சுற்றுப்பயணம்

செப். 15: மாலே 5 மணி: பட்டுக்கோட்டை — ஆரம்ப ஆசிரியர், அஞ்சல் ஊழியர் சிறப்பு மாநாடு;
இரவு 7 மணி: ஒரத்தநாடு தி. மு. கழகப் பொதுக்கூட்டம்;
16: காலே 8 மணி: பிச்சாண்டார் கோவில் — திருமணம்;
காலே 10 மணி: கொப்பம்பட்டி - திருமணம்;
பகல் 2 மணி: முசிறி — திருமணம்;
மாலே 6 மணி: கொப்பம்பட்டி — பொதுக்கூட்டம்;
17: மாலே 4½ மணி: பழனி பஞ்சாலேத் தொழிலாளர் கூட்டம்
மாலே 6½ மணி: தி.மு. கழகப் பொதுக் கூட்டம்
18: மாலே கீரனூர் — பொதுக்கூட்டம்

மறைமலேயடிகளார்

ஏழாம் ஆண்டு நினேவு வாரம்

செப். 15 முதல் 22 தேதிவரை கோண்டாட வேண்டுகோள்

தென்னிந்திய தமிழ்ச் சங்கம் சார்பில் திரு. வ. சுப்பையா (பிள்ளே) அவர்கள் விடுத்திருக்கும் அறிக்கையில் கோரியிருப்பதாவது:—

அடிகளார், தாம் 15-9-50-ல் மறைவெய்துவதற்குமுன் எழுதி வைத்த விருப்ப ஆவணத்திற் கண்ட குறிப்புக்களேச் செயற்படுத்துதற்குச் சென்னே உயர் நீதிமன்றம் 30-4-57-ல்செயற்குழுவினருக்கு ஆணே தந்துள்ளது.

அதனுல், அடிகளார், தமது இளமைக் காலமுதல் ஆராய்ச்சிக்கெனத் தொகுத்துவைத்துள்ள நாலாயிரத்துக்கு மேற்பட்ட அரிய நூல்களே எடுத்துவந்து சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தொகுத்து வைத்திருக்கும் அரிய பல நூல்களேயும் சேர்த்து 'மறைமலேயடிகளார் ஆராய்ச்சி நூல் நிலேயம்' ஒன்றைச் சென்னேயில் நிறுவுவதற்குப் பெரிய கட்டடம் வாங்கியிருக்கிறது. பல்லாவரத்தில் 'மறைமலேயடிகளார் தமிழ்க் கல்லூரி' அமைக்கவும் முயற்சி நடைபெறுகிறது.

அடிகளார் எழுதிய நூல்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்ருகக் கழக வழி அச்சிடப்பெற்று வெளிவருகின்றன.

அடிகளார் நூல்களாலேதான் மக்களிடையே நல்வாழ்வுக்கேற்ற விழுமிய கருத்துக்கள் பரவும். தூய தமிழில் பேசும் ஆற்றலும் எழுதும் ஆற்றலும் பெருகும். தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கட்சியினரையும் ஒன்றுபடுத்தும் ஆற்றல் அடிகளார் நூல்கட்கே உண்டு.

எனவே, அடிகளார் நூல்களேப் பள்ளி, கல்லூரிகளின் நூல்நிலேயங்களிலும், பொது நூல் நிலேயங்களிலும் வாங்கும்படி செய்தல் வேண்டும். செல்வர்களும் அவற்றை வாங்கிச் சூழவுள்ள தம் உற்ருர் உறவினர் நண்பர் முதலியோர்க்குக் கொடுத்துப் படிக்குமாறு செய்தல்வேண்டும்.

அடிகளார் பெயரில் கழகங்களும், மன்றங்களும், கல்லூரிகளும், நகர்களும், தெருக்களும், பூங்காக்களும் தமிழகமெங்கும் அமைத்தல்வேண்டும்.

அடிகளார் உருவப்படங்களும், சிலேகளும் யாங்கணும் நிலே நாட்டுதல்வேண்டும். இல்[illegible]களிலெல்லாம் அடிகளார் [illegible]களும் உருவப்படமும் [illegible] தல் வேண்டும்.

செப்டம்பர் 15 முதல் 2[illegible] [illegible] மறைமலேயடிகளார் [illegible] [illegible] [illegible] [illegible] தமிழ்ப்பணி [illegible] நிலேயங்களே யும், [illegible] மக்களேயும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிருேம்.

கழகக் கூட்டங்கள்

★

திருவள்ளூர்:
17—9—57 மாலே 6-30 மணிக்கு
தலேவர்: டி. எத்திராசன்
பேசுவோர்:
என். வீ. நடராசன்
கா. அப்பாத்துரை
அலமேலு-அப்பாத்துரை

★

மதகுசாலே:
பஞ்சாயத்துஅலுவலத்தின் முன்பு
16—9—57 மாலே 6 மணிக்கு
தலேவர்: பி. ஏ. லிங்கன்
பேசுவோர்:
கி. மனேகரன்
கு. இராசமாணிக்கம்
கோ. சி. மணி
சு. பத்மநாபன்
என். அசோகன்
து. சேரலாதன்

★

திருவையாறு:
கீழ வீதியில்
17—9—57 மாலே 5 மணிக்கு
பேசுவோர்:
கி. மனேகரன்
மதுரை எஸ். முத்து
இளமுருகு
போற்செல்வி
போ. தருமன்

★

குன்னத்தூர்:
தேர்த் திடலில்
17—9—57 இரவு 7 மணிக்கு
தலேவர்: கு. நடேசன்
பேசுவோர்:
இரா. பாலசுந்தரம்
அரு. திருநாவுக்கரசு
க. அன்பரசு

★

அருப்புக்கோட்டை:
பாண்டியன் திடலில்
17—9—57 இரவு 7 மணிக்கு
பேசுபவர்:
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.

★

உடன்குடி:
மிஷன் ஆஸ்பத்திரி அருகில்
17—9—57 இரவு 7 மணிக்கு
தலேவர்:
சண்முகம் குலசேகரன்
பேசுவோர்:
என். எஸ். இளங்கோ
டி. ஆர். சுப்பிரமணியம்

★

பழனி:
17—9—57 இரவு 7 மணிக்கு
தலேவர்: சி. வெங்கிடுசாமி
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
கா. வெங்கடாசலம்
எம். நூர்முகம்மது
சண்முகம்

★

திருத்தங்கல்:
பாண்டியன் பூங்காவில்
17—9—57 இரவு 8 மணிக்கு
தலேவர்: டேவிட் ரத்தினம்
பேசுவோர்:
கே. ஆர். பி. மணிமொழியன்
என். கே. குருசாமி
வி. கருணுகரன்
இரா. பாண்டியன்
இன்னிசை:
எஸ். வி. சாமி குழுவினர்

★

திருவாடானே:
காந்தி சதுக்கத்தில்
16—9—57 இரவு 8 மணிக்கு
தலேவர்:
நவமார்க்கண்டேயன்
பேசுவோர்:
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.
வீ. வீரப்பன்
இராம. வெள்ளேயன்

சென்னே 46-வது வட்ட தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு:

15.9-57 காலே 10 மணிக்கு, தேனும்பேட்டை மேற்படி வட்ட தி. மு. க. பணிமனேயில் மாவட்டத் துணைச் செயலாளர் தலேமையில், கழக நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும்.

மறைமலேயடிகளார் நினேவு விழா

இரா. நெடுஞ்செழியன்

கலந்துகோள்கிருர்

15—9—57 மாலே 4 மணிக்கு, சென்னே இராஜாஜி மண்டபத்தில் மேயர் திரு. கே. என். சீனிவாசன் அவர்கள் தலேமையில் மறைமலேயடிகளார் ஏழாம் ஆண்டு நினேவு விழா நடைபெறும். திரு. எம். கே. சண்முகம் அவர்கள் அடிகளார் படத்தைத் திறந்துவைப்பார்.

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மற்றும், திருவாளர்கள் ரா. பி. சேதுப்பிள்ளே, மு. வரதராசனுர், தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், இளவழகனுர், மயிலே-சிவ. முத்து, அ. க. நவநீதகிருட்டின பிள்ளே ஆகியோர் பேசுவர்.

ஈ. வெ. கி. சம்பத்

பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ள டெல்லி சென்றிருந்த தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், வரும் 18—9—57 புதன்கிழமை காலே சென்னே வந்து சேருவார் என்று தெரியவருகிறது.

எஸ்.பூபதி—மு.தனம்மாள்

திருமணம்

15—9—57 காலே 9-மணிக்கு வடசென்னே-பழைய வண்ணுரப்பேட்டை, இன்ஸ்பெக்டர் சுப்பராயலு தெரு, எண்-10 இல்லத்தில், ஏ. எஸ். வேணு பி. ஏ. தலேமையில் தோழர் எஸ். பூபதி—தோழியர் மு. தனம்மாள் திருமணம் நடைபெறும்; தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரன், இரா. செழியன் எம்.ஏ., ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

அன்பில் - தர்மலிங்கம்

சுற்றுப்பயணம்

செப்டம்பர்:—
14: அம்மாப்பேட்டை (தஞ்சை மாவட்டம்)
15: காலே: மணப்பாறை திருமணம்
மாலே 5 மணி: மாந்துறை தி. மு. க. துவக்க விழா
மாலே 6 மணி: பூவாளூர் பொதுக்கூட்டம்
16: காலே: இளங்காடு திருமணம்
மாலே 4 மணி: கூகூர் திருமணம்
மாலே 6 மணி: கூகூர் பொதுக்கூட்டம்
18: மாலே 6 மணி: கீரனூர் பொதுக்கூட்டம்
இரவு 8 மணி: புதுக்கோட்டை பொதுக்கூட்டம்
21, 22: திருவண்ணுமலே மாநாடு

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலேமைக் கழகம்—அறிக்கை எண்: 8/57

திராவிட நாடு விடுதலே வாரம்

செப்டம்பர் 17-ஆம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 9-வது ஆண்டு துவக்க நாளான 17—9—1957-ஆம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை திராவிட நாடு விடுதலே வாரமாகக் கொண்டாடும்படி ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளேகளேயும் கழகச் சார்புள்ள அமைப்புகளேயும் அன்போடு விரும்பிக் கேட்டுக்கொள்கிருேம்.

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், இலவச இசை—நாடக அரங்குகள் ஆகியவற்றைச் சிறப்போடும் பொலிவோடும் நடத்தி நாட்டுப் பிரிவினேக்கான கருத்து விளக்கம் தருவதுடன், கழகப் போராட்டங்களில் உயிர்நீத்த தோழர்களுக்கு வீரவணக்கமும் செலுத்தக் கேட்டுக்கொள்கிருேம்.

அன்பன்,

4—9—57
'அறிவகம்'
சென்னே-13

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

வட மணப்பாக்கம்

பஞ்சாயத்துத் தெரு மின்விளக்கு ஒளியேற்று விழா

அண்ணு கலந்துகோள்கிருர்

16-9-57 மாலே 6-30 மணிக்கு வட மணப்பாக்கம் "தெரு மின் விளக்கு ஒளியேற்று விழா" திருவத்திபுரம் ஊராட்சி மன்றத் தலேவர் திரு. மா. இராசு (முதலியார்) அவர்கள் தலேமையில் நடைபெறும். அண்ணு அவர்கள் விழாவினேத் துவக்கிவைப்பார்கள்.

இராமச்சந்திரன்-கோகிலா

திருமணம்

16—9—57 காலே 9-மணியளவில், பல்லாவரம் அடுத்த கவுல்பஜார் மணமகன் இல்லத்தில் தோழர் பி. இராமச்சந்திரன் — தோழியர் கோகிலா திருமணம் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் தலேமையில் நடைபெறும்; தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், சொர்ணம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

'பணமா? குணமா?'— நாடகம்

15-9-57 மாலே 6-30 மணிக்கு, சென்னே ஒற்றைவாடை தியேட்டரில் வியாசர்பாடி மக்கள் மறுமலர்ச்சி மன்றநிதிக்காக, தோழர் கண்ணதாசன் தலேமையிலும், தோழர் டி.வி. நாராயணசாமி முன்னிலேயிலும் பணமா? குணமா? என்னும் சீர்திருத்த நாடகம் நடைபெறும். அவ்வமயம் கா. அப்பாதுரையார் பொன்விழாவிற்கு நிதியளிக்கப்படும்,

கலேவாணர் அனுதாப கூட்டமும் ஊர்வலமும்

15—9—57 மாலே 6 மணிக்கு சென்னே-மயிலே தொகுதியைச் சேர்ந்த, 44, 45, 46, 50 ஆகிய வட்டங்களின் தி. மு. க. கிளேகள் சார்பில் மயிலே கபாலி டாக்கீஸ், எதிரிலுள்ள திடலில் நடைபெறவிருக்கும் அனுதாபக் கூட்டத்தில் தோழர்கள் கண்ணதாசன், டி. வி. நாராயணசாமி, என். எஸ். நாராயணன்(பிள்ளே) மற்றும் பலர் பேசுவர்.

மாலே 2 மணிக்கு அமில்டன் வாராவதி பஸ் நிலேயத்திலிருந்து ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு பஜார் ரோடு, மாதா கோவில் தெரு, செயின்ட்மேரீஸ் ரோடு, மோபரீஸ் ரோடு, எல்டாம்ஸ்ரோடு, மவுபிரே ரோடு, எட்வர்டு எலியட்ஸ் ரோடு, ஆர். எச. ரோடு, லஸ் வழியாகச் சென்று பொதுக் கூட்டம் நடைபெறும் திடலே அடையும்.

திருப்பூர் நகர தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு

15—9—57 மாலே 5 மணிக்கு நகர வழிப்போக்கர் விடுதியில் திருப்பூர் நகர தி. மு. க. செயற்குழு நடைபெறும். பல முக்கிய பிரச்சினேகள் ஆய்வுக்குவரும்.

சென்னே—இராயபுரம் மக்கள் முன்னேற்ற மன்றக் கூட்டம்

15—9—57 ஞாயிறு மாலே 7 மணிக்கு இராயபுரம் தம்பு செட்டி சந்திலுள்ள மேற்படி மன்றப் பணிமனேயில் தோழர் வி. டி. அரசு தலேமையில், 'நாட்டுப் பிரிவினே' என்ற பொருள் குறித்து தோழர்கள் நடேசன், விவேகானந்தம், தி. சு. கிள்ளிவளவன் ஆகியோர் பேசுவர்.

நெல்லிக்குப்பம் நகர தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு

16—9—57 மாலே 6 மணியளவில் நெல்லிக்குப்பம் நகர தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் கழகக்கட்டிடத்தில் நடைபெறும்.

சென்னே-ஏழுகிணறு அண்ணு அறிவகப் பொது உறுப்பினர்கட்கு

15-9-57 காலே 9-30 மணிக்கு சண்முகமுதலித் தெருவிலிருக்கும் நகராண்மைக் கழகப் பள்ளியில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னே) வெளியிடப்பெறுகி[illegible] [illegible] ஆசிரியர்: இரா. நெடுஞ்[illegible] [illegible] [illegible]

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட நாடு விடுதலே வாரம்

17—9—57 மாலே 6-மணிக்கு

சைதாப்பேட்டை குயவர்வீதியில்

★

தோழர் கோ. செங்குட்டுவன்

தலேமையில்

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

மு. கருணுநிதி

பேசுவர்.

★

இசை: சேலம்-சீனிவாசன்

பொறுப்பு: 47-வதுவட்ட தி. மு. க. —சென்னே மாவட்ட தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★